Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, MAY 9, 2023

செவ்வாய்க்கிழமை மே 09, 2023 | ஒளி: 08 கதிர் 266 | பக்கம்:08 | நகரபதிப்பு | FREE



தலைமன்னார் – இராமேஸ்வரம் இடையே

# கப்பல் சேவையை விரைவு படுத்துமாறு கோரிக்கை

## ஆவணக் காணொளியும் கையளிப்பு

றொசேரியன் லம்பேட்

தலைமன்னார் - இராமேஸ்வரம் இடையே கப்பல் போக்குவரத்தை விரைவுபடுத்த கோரியும் பண்டைய காலத்தில் மன்னார் மாவட்டம் எவ்வாறு சிறப்புடன் இருந்தது என்பதை இலக்கிய நூல்கள் மூலம் ஆய்வு செய்தும் உருவாக்கப்பட்ட காணொளி அடங்கிய இறுவெட்டு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல்லிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.

மன்னார் ரோட்டரி கழகத்தின் அனுசரணையில் மன்னார் ஊடகவியலாளர் எஸ். ஜெகனின் இலக்கிய நூல்களின் ஆய்வில் உருவாக்கப்பட்ட குறித்த காணொளி, திங்கட்கிழமை (08) காலை 9.30 மணியளவில் கையளிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

# தமிழர்களை விரட்டினால் எங்கே செல்வது



தமிழர்களை அவர்களது தாயகத்திலிருந்தும் வெளியேற்றவா புதிய புத்த கோயில்கள் என்று கேள்வி எழுப்பிய ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன், வடக்கின் பல பகுதிகளில் பல்வேறு யுக்திகளைக் கையாண்டு புதிதாகக் கட்டப்படும் புத்த கோயில்கள் தமிழர்களை அவர்களது தாயகப் பிரதேசத்திலிருந்தும் விரட்டியடிப்பதற்கான முயற்சியா என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினூடாக வலியுறுத்தப்பட்டதுமான எமது தாயகபூமியான வடக்கு-கிழக்கிலிருந்தும் அரசின் நடவடிக்கையினூடாக நாம் விரட்டியடிக்கப்பட்டால் நாம் எங்கே செல்வது? எனவும் அவர் வினவினார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இப்பொழுது வடக்கு-கிழக்கைக் குறிவைத்து அங்குள்ள புராதன சைவ ஆலயங்களை உடைத்து, நீதிமன்ற உத்தரவுகளையும் மீறி, தான்தோன்றித்தனமான முறையில், தனிநபர்களின் காணிகளையும் கபளீகரம் செய்து, அவற்றில் புத்தகோயில்களைக் கட்டுவது மாத்திரமல்லாமல் அதனைச் சுற்றியுள்ள பலநூறு ஏக்கர் காணிகளையும் சுவீகரித்து அதற்கு இராணுவ பாதுகாப்பையும் வழங்கி தொடர்ச்சியாக சிங்கள குடியேற்றங்களையும் செய்து வருகின்றார்கள்.

இவ்வாறு யுத்தத்திற்குப் பின்னர், ஹம்பாந்தோட்டை போன்ற தூரப் பிரதேசங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட சிங்கள மக்களை வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் குடியேற்றி வருகின்றார்கள்.

கிழக்கில் ஏற்கனவே முக்கியமான பகுதிகளில் மிகப்பாரியளவிலான சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு புதிய சிங்கள பிரதிநிதித்துவங்களும் உருவாக்கப்பட்டுவிட்டது.

இப்பொழுது வடக்கு மாகாணத்தில் மீண்டும் ஒருமுறை தமிழீழக் கோரிக்கைக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாமல் இருக்க வேண்டும் என்றால் வடக்கு மாகாணத்தின் மக்கள் தொகையில் 25 சதவீதம் சிங்கள மக்களாக இருக்க வேண்டும் என அரச இராணுவ உயர் மட்டங்கள் முடிவெடுத்துச் செயற்படுகின்றன.

இதன் வெளிப்பாடாகவே வடக்கு-கிழக்கில் 1,000 புத்தவிகாரைகளைக் கட்டுவதற்கு 2018ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தில் கோடிக்கணக்கான நிதியும் ஒதுக்கப்பட்டது.

இதன் மூலம் வடக்கின் குடிசனப் பரம்பலை மாற்றி அவர்களது பாராளுமன்ற, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைத்து வடக்கையும் ஒரு கலவர பூமியாக மாற்றி தமிழ் மக்களை அங்கிருந்தும் விரட்டுவதே மாறிமாறி ஆட்சிக்கட்டிலில் ஏறும் இலங்கை அரசின் நோக்கமாக இருக்கின்றது.

தொடர்ச்சி P2

இன்று முதல் மே.15 வரை

# முள்ளிவாய்க்கால் கஞ்சி



முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவுகூர்ந்து செவ்வாய்க்கிழமை (09) முதல் மே 15ம் திகதிவரை வடக்கு, கிழக்கு எங்கும் முள்ளிவாய்கால் கஞ்சியினை வழங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் திங்கட்கிழமை (08) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் இதனை தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

# முருகனுடன் மூவர் கைது

எஸ்.றொசேரியன் லெம்பேட்தொ



ல்பொருள் என சந்தேகிக்கப்படும் பொருள் ஒன்றுடன் மூவர் மன்னார் பிரதான பாலத்தடி யில் உள்ள சோதனை சாவடியில் வைத்து ஞாயிற்றுக்கிழமை (7) கைது செய்யப்பட்டுள்ளனர்.

ன்னார் எருக்கலம்பிட்டி பகுதியை சேர்ந்த இரண்டு பெண்களும் ஆண் ஒருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

ஜனாதிபதி தலைமையில்

# தேசிய படைவீரர் நினைவுதினம்



இலங்கையில் முப்பது வருடகால யுத்தத்தின் போது வீரமரணம் அடைந்த படைவீரர்களுக்கு தேசத்தின் நன்றி தெரிவிக்கும் தேசிய படைவீரர் நினைவுதின நிகழ்வு முப்படைத்தளபதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான பூர்வாங்க கலந்துரையாடல் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் திங்கட்கிழமை (08) காலை இடம்பெற்றது.

எதிர்வரும் மே 19 ஆம் திகதி பத்தரமுல்லை படைவீரர் நினைவுத்தூபிக்கு முன்பாக தேசிய படைவீரர் நிகழ்வு நடைபெறவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகள், பிரதமர்கள்,சபாநாயகர், இராஜாங்க அமைச்சர்கள்,

தொடர்ச்சி P2


# 20 இலட்சம் வாகனங்கள் கறுப்பு பட்டியலில்



ஐந்து வருடங்களுக்கும் மேலாக அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்காத கிட்டத்தட்ட 20 இலட்சம் வாகனங்களை கறுப்பு பட்டியலில் சேர்ப்பதற்கு தீர்மானித்துள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட வாகனங்களின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர்கள் தங்கள் பதிவை புதுப்பித்து, தடுப்புப்பட்டியலில் இருந்து வெளியேறலாம் என்றும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



# உ/த விடைத்தாள் மதிப்பீடு: ஆணையாளர் பாராட்டு

2022ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கான விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதில் பங்கேற்பதற்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் எடுத்த தீர்மானத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், திங்கட்கிழமை (08) பாராட்டியதுடன், 12 பாடங்களுக்கான விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் பணி ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

ஜூன் 15ஆம் திகதி வரை

# டெலிகொம் பங்குகள் விற்கப்பட மாட்டாது

## உயர் நீதிமன்றத்துக்கு மஹிந்த உறுதி



ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் அரசாங்க பங்குகளை எதிர்வரும் ஜூன் மாதம் 15ஆம் திகதி வரை விற்பனை செய்யப் போவதில்லை என்று நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, உயர்நீதிமன்துக்கு திங்கட்கிழமை (08) உறுதியளித்துள்ளார்.

பங்குகளை மாற்றுவதற்கு எதிராக இரண்டு தொலைத்தொடர்பு தொழிற்சங்க செயற்பாட்டாளர்கள் சமர்ப்பித்த மனு டுத்துக்கொள்ள ப்பட்ட போதே இந்த விடயம் அறிவிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



15 கோடி ரூபாய் பெறுமதியான

# தங்கத்துடன் வெளியேற முயன்றவர் சிக்கினார்

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அனைத்து விசாரணைகளையும் முடித்துவிட்டு சுங்க வளாகத்தில் இருந்து வெளியே வந்து விமான நிலையத்தில் இருந்து வெளியேற முயன்ற நபரொருவர் 15 கோடியே இருபத்தைந்து இலட்சம் ரூபா பெறுமதியான 07 கிலோ கிராம் தங்கத்துடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# ஐ.தே.கவினருக்கு ஆளுநர் பதவி




ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சிலரை புதிய மாகாண ஆளுநர்களாக நியமிப்பார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க ஆருடம் வெளியிட்டுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், வடமேல் மாகாண ஆளுநர் அட்மிரல் வசந்த

தொடர்ச்சி P2

# ஜி.எஸ்.பி. ஒழுங்குமுறை குறித்து இன்று பேச்சு

2024 - 2033ஆம் ஆண்டுக்கான ஐரோப்பிய ஒன்றிய ஜி.எஸ்.பி. ஒழுங்குமுறையின் புதிய சுழற்சியை ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் விளக்கவுள்ளனர் என்றும் இது 2024 ஜனவரி 01 முதல் அடுத்த 10 ஆண்டுகளுக்கு நடைமுறையிலிருக்கும் என்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்தது.

இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையிலான கூட்டு ஆணைக்குழுவின்

தொடர்ச்சி P2

படையினர் வசமுள்ள காணிகள்

# கிளிநொச்சியில் இராணுவ அடக்குமுறை சித்தரிக்கிறது

கிளிநொச்சி நகரத்தில் உள்ள நாற்பது சதவீதமான அரச மற்றும் தனியார் காணிகளை படையினர் தொடர்ந்து சம்பவம் வைத்திருக்கும் வரை நகரத்தின் அபிவிருத்தியில் எந்த முன்னேற்றத்தையும் எட்ட முடியாது என்று தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், நகரத்தில் இவ்வாறு அதிகளவான காணிகள் படையினர் வசம் இருப்பது என்பது இராணுவ அடக்கு முறையை சித்தரிக்கிறது என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# களுத்துறை மாணவி பாலியல் வன்புணர்வு?

## பகுப்பாய்வுக்கு உடற் பாகங்கள் அனுப்பி வைப்பு

மர்மமான முறையில் உயிரிழந்த களுத்துறை பாடசாலை மாணவியின் உடல் உறுப்புகள் அரச ரசாயன பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மாணவி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதயகுமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# கோதுமை மா, சீனி விலை அதிகரிப்பு



கோதுமை மா மற்றும் சீனி ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய உணவுப்பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் நிஹால் செனவிரத்ன தெரிவித்தார்.

ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 10 ரூபாயாலும் ஒரு கிலோகிராம் சீனியின் விலை 25 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

இந்தியாவில் இருந்து சீனி இறக்குமதி செய்யப்படுவதை கட்டுப்படுத்தும் நோக்கில் சீனியின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

225 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் சீனி 250 ரூபாயாக அதிகரித்துள்ள அதேவேளை, கோதுமை மாவின் மொத்த விற்பனை விலை 210 ரூபாயாக அதிகரித்துள்ளது.

கோதுமை மாவுக்கு விதிக்கப்பட்டிருந்த 3 ரூபா வரிச்சலுகையை

தொடர்ச்சி P2

# கோட்டா, மஹிந்தவுக்கு எதிரான மனு ஜூலை 5இல் பரிசீலனை

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமான முக்கிய குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்களை ஜூலை 5 ஆம் பரிசீலிப்பதற்கு உயர்நீதிமன்றம், திங்கட்கிழமை (08) தீர்மானித்தது.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# தமிழர்களை விரட்டினால் எங்கே செல்வது

ஏற்கனவே யுத்தத்தின் காரணமாக ஏறத்தாழ 1.5 மில்லியன் மக்கள் அவர்களது தாயகப் பிரதேசத்திலிருந்து விரட்டப்பட்டுவிட்டார்கள்.

இலங்கை அன்னிய ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெறவேண்டுமென்பதற்காக தமிழ் மக்களும் இன மத பேதமின்றி போராட்டக்களத்தில் முன்னின்று போராடினார்கள்.

அந்தக் காலத்தில் தமிழ் மக்கள் தனிநாட்டிற்காகவோ அல்லது சுயாட்சிக்காகவோ போராடவில்லை.

இலங்கையின் தென்பகுதியில் இனமோதல்களை உருவாக்கி, தமிழர்களுக்கு அவர்களது தாயகப் பிரதேசமான வடக்கு-கிழக்குதான் பாதுகாப்பான பிரதேசம் என்ற அடிப்படையில் அவர்களை வடக்கு-கிழக்குப் பிரதேசத்திற்கு விரட்டியடித்ததுடன் அரசே கப்பல்கள் மூலம் தமிழ் மக்களை அப்பிரதேசங்களுக்கு அனுப்பியும் வைத்தது. இவ்வாறான நடவடிக்கைகள் அரசால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஐ.நா. சபையும் சர்வதேச சமூகமும் இலங்கை அரசின் இவ்வாறான விடயங்களை கண்டுகொள்ளாமல் இருப்பதும் கண்டிக்காமல் இருப்பதும் இலங்கை அரசின் தமிழர் விரோத செயற்பாட்டிற்கு உலகநாடுகளும் ஐ.நா. சபையும் துணைபோகின்றதா என்ற அச்சத்தையும் கேள்வியையும் எழுப்பியுள்ளது.

இப்பொழுது, வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் எதிர்ப்பையும் மீறி, மிகப்பெருமளவிலான வேகமான சிங்கள பௌத்த மயமாக்கல் என்பது ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

தமிழ்த் தேசிய இனத்தின் தனித்துவம் அவர்களின் இருப்பு காப்பாற்றாப்படவேண்டுமாக இருந்தால், அவர்களின் மொழி, கலாசாரம், பண்பாடு பாதுகாக்கப்பட வேண்டுமாக இருந்தால் அரசு தனது சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனைகளைக் கைவிட்டு சகல இனங்களும் இந்த மண்ணில் தமது சொந்தப் பிரதேசங்களில் அச்சமின்றி பாதுகாப்புடன் வாழும் சூழ்நிலையை ஏற்படுத்த சர்வதேச சமூகம் குரல் கொடுக்க வேண்டும். குறிப்பாக இந்தியா இந்த விடயங்களில் தனது தீவிர கவனத்தைச் செலுத்த வேண்டும்" என்றார்.

## முருகனுடன்...

தொல்பொருள் என சந்தேகிக்கப்படும் சிறிய அளவிலான முருகன் சிலை ஒன்றை தம் உடமையில் வைத்திருந்தனர் என்றக் குற்றச்சாட்டின் கீழ் இந்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் அந்த மூவரும் ஒப்படைத்துள்ளனர்.

## உ/த விடைத்தாள்...

எஞ்சிய பாடங்களின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்கு தமது பங்களிப்பை சம்மேளனம் வழங்க வேண்டும் என்றும் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர கோரிக்கை விடுத்தார்.

கடந்த வியாழக்கிழமை முதல் உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் இணைவதற்கு தீர்மானித்ததாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் தெரிவித்திருந்த நிலையிலேயே ஆணையாளர் சம்மேளனத்தை பாராட்டியுள்ளார். மேலும், உயர்தர விடைத்தாள் மதிப்பீட்டை நிறைவு செய்யும் முயற்சியில் அனைத்து ஆசிரியர்களும் இணையுமாறு ஆணையாளர் நாயகம் கேட்டுக்கொண்டார்.

குறித்த விடைத்தாள்கள், வெளி மாகாணங்களில் அமைந்துள்ள 10 மத்திய நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளை விரைவில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கசம்மேளனம், பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சுமார் 02 மாதங்களுக்கு அதிக காலம், விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜி.எஸ்.பி. ஒழுங்குமுறை...

25ஆவது அமர்வு கொழும்பில் உள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் செவ்வாய்க்கிழமை (09) இடம்பெறவுள்ளது.

அமைச்சினால் திங்கட்கிழமை (08) வெளியிடப்பட்ட அறிக்கையில் மேற்குறிப்பிட்ட விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஐரோப்பிய வெளிவிவகாரச் சேவையின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் பாவோலா பாம்பலோனி ஆகியோர் கூட்டத்திற்கு இணைத் தலைமை தாங்கவுள்ளனர்.

இரு தரப்புக்கும் பரஸ்பர நலன்களைக் கொண்ட பரந்த அளவிலான இருதரப்பு மற்றும் பலதரப்பு விடயங்கள் குறித்து கூட்டு ஆணைக்குழுவில் கவனம் செலுத்தப்படவுள்ளதுடன், எதிர்கால ஒத்துழைப்புக்கான பகுதிகள் குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளது.

ஆளுகை, சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகள் மீதான பணிக்குழு, வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான பணிக்குழு மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான பணிக்குழு ஆகிய கூட்டு ஆணைக்குழுவின் கீழ் நிறுவப்பட்ட மூன்று பணிக்குழுக்களின் முடிவுகள் குறித்தும் இந்த சந்திப்பின் போது விரிவாக கலந்துரையாடப்படவுள்ளது.

2024 - 2033ஆம் ஆண்டிற்கான ஐரோப்பிய ஒன்றிய ஜி.எஸ்.பி. ஒழுங்குமுறையின் புதிய சுழற்சியை ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் விளக்கவுள்ளதுடன், இது 2024 ஜனவரி 01 முதல் அடுத்த 10 ஆண்டுகளுக்கு நடைமுறையிலிருக்கும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைப் பிரதிநிதிகள் குழுவில் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசியக் கொள்கைகள், நீதி, சிறை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள், வணிகம், வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு, அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ள்ளனர்.

## கோதுமை மா,...

உடன் அமுலாகும் வகையில் நீக்குவதாக, அறிவிக்கப்பட்டதை அடுத்தே விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

2020 ஜனவரியில் சுங்க இறக்குமதி வரி கிலோவுக்கு 15 தொடக்கம் 16 ரூபாயில் இருந்து 3 ரூபாயாகக் குறைக்கப்பட்ட நிலையில் கடந்த அரசாங்கத்தால் வரி விலக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, சுங்க கட்டளைச் சட்டத்தின் 19 (அ) பிரிவின் அடிப்படையில் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து சுங்கத் திணைக்களத்துக்கு அறிவித்தது.

2019 டிசம்பரில், அப்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த சிறிது நேரத்திலேயே, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் கோதுமை மாவுக்கான 36 ரூபாய் என்ற ஒருங்கிணைந்த வரியை வர்த்தமானி அறிவிப்பின் மூலம் ஒரு கிலோவுக்கு 8 ரூபாய் என்ற சிறப்புப் பண்ட வரியாக மாற்றியமைத்தது.

இதனால் அரசுக்கு வர வேண்டிய வருமானமான பலகோடி ரூபாய் அரச திறைசேரிக்கு கிடைக்கவில்லை என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

## தேசிய படைவீரர்...

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உட்பட முப்படைகளின் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் உட்பட பாதுகாப்பு பிரதானிகள், போரில் காயமடைந்த படைவீரர்களின் பங்களிப்புடன்

நஇந்த படைவீரர் நினைவு தின நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்றுவதற்காக யுத்தத்தில் காயமடைந்த படைவீரர்கள், வீரமரணம் அடைந்த படை வீரர்களின் உறவினர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்படவுள்ளது.

இந்த ஆண்டும் பெருமைக்குரிய வகையில் படைவீரர் நினைவு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், நாட்டின் ஆள்புல ஒருமைப்பாட்டையும் இறைமையையும் பாதுகாப்பதற்கு உயிர்த்தியாகம் செய்த இராணுவம், விமானம்படை, கடற்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப்படை வீரர்களின் நித்திய நினைவுகளையும், வீரத்தையும் போற்றும் வகையில் விசேட படைமேள தாளமும், மலர் அஞ்சலியும் இடம்பெறவுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் ஜெனரல்(ஓய்வுபெற்ற) கமல்குணரத்ன தெரிவித்தார்.

## டெலிகொம்...

நிதியமைச்சின் செயலாளரைப் பிரதிநிதித்துவப்படுத்திய பிரதி சொலிசிட்டர் ஜெனரல், இந்தப் பங்குகளை மாற்றும் செயல்முறை முற்றிலும் சட்டபூர்வமானது என்று மன்றுக்கு அறிவித்தார்.

எதிர்வரும் ஜூன் 15ஆம் திகதியன்று மனு பரிசீலிக்கப்படும் வரை பங்குகளை விற்பனை செய்யப்போவதில்லை என்று மன்றுக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

சட்டப்பூர்வ வழிமுறைகளின் ஊடாக தொடர்ந்தும் பங்கு விலக்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திறைசேரி செயலாளர் மேலும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா டெலிகொம் வெளியிடப்பட்ட பங்கு மூலதனத்தில் திறைசேரி 49.50 சதவீத பங்குகளைக் கொண்டுள்ள நிலையில், திறைசேரி செயலாளரிடம் உள்ள பங்குகளை விலக்கிக் கொள்வதற்கு அமைச்சரவை கொள்கை அடிப்படையில் அனுமதி வழங்கியது.

இந்தவிடயத்தை திறைசேரி செயலாளர் ஸ்ரீலங்கா டெலிகொம் பணிப்பாளர் சபைக்கு அறிவித்ததையடுத்து இந்த விடயம் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.தே.கவினருக்கு...

கரன்னாகொட, ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் மற்றும் சப்ரகமுவ ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ ஆகியோரையே பதவி விலகுமாறு ஜனாதிபதி அலுவலகம் பணித்துள்ளது.

இது குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 154(ஆ) பிரிவின் கீழ் புதிய ஆளுநர்களை நியமிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது என்றும் கறுப்பு புள்ளிகள் இல்லாத ஐக்கிய தேசியக் கட்சியினரை புதிய ஆளுநர்களாக நியமிக்கும் யோசனை ஜனாதிபதிக்கு இருக்கலாம் என்றும் குறிப்பிட்டார்.

தன்னை ஒரு மாகாணத்தின் ஆளுநராக நியமிப்பது குறித்து சமூக ஊடகங்களில் தனது பெயர் குறிப்பிடப்படுவதாகவும் தன்னைப் பற்றி பேச விரும்பவில்லை என்றும் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு வெளியேறிய அனைவரும் அரசியல் ரீதியாக அழிக்கப்பட்டுள்ளனர் என்று கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்ததை நினைவூட்டினார்.

அந்தக் கருத்து தனது தந்தை மறைந்த அமைச்சர் காமினி திஸாநாயக்கவுக்கும் பொருந்தும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு திரும்பிய தனது தந்தை கட்சியின் மேடையில் தனது இறுதி மூச்சு விட்டதாகவும் சுட்டிக்காட்டினார்.

## தங்கத்துடன்...

டுபாயில் இருந்து ஞாயிற்றுக்கிழமை (07) காலை கட்டுநாயக்க விமான நிலைத்தை வந்தடைந்த குறித்த நபர் விமான நிலையத்தில் அனைத்து விசாரணைகளையும் முடித்துவிட்டு சுங்க வளாகத்தில் இருந்து வெளியேறியுள்ளார்.

அதன்போது பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து 6 கிலோ 996 கிராம் தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது.

4 கிலோ 942 கிராம் தங்க பிஸ்கட்களும், 2 கிலோ 942 கிராம் நகைகளும் இருந்ததாக தெரிவித்த பொலிஸார், கொழும்பு மருதானையைச் சேர்ந்த 43 வயதான இந்த நபர் அடிக்கடி விமானப் பயணங்களை மேற்கொள்ளும் வர்த்தகரொருவர் என்று தெரிவித்தனர்.

## கிளிநொச்சியில்...

கிளிநொச்சி நகரத்தின் நகர அபிவிருத்தி தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்

"கிளிநொச்சி நகரத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ள டிப்போ சந்தியில் உள்ள காணியினை படையினர் ஆக்கிரமித்து வைத்திருப்பதுடன் அதனை இராணுவத்தினர் தன்னிச்சையாக அளவீடு செய்துள்ளனர்.

அதாவது அளவீடு செய்யப்படுவது தொடர்பில் பிரதேச செயலாளருக்கோ அல்லது மாகான காணி ஆணையாளருக்கோ தெரியாது. இங்கு இராணுவ நிர்வாகமே நடைபெறுகின்றது என்பதை காட்டி நிற்கின்றது.

குறிப்பாக நகரத்தில் அதிக மக்கள் பயன்படுத்துகின்ற டிப்போ சந்தியில் ஒரு சுற்றுவட்ட பாதையை கூட அமைக்க முடியாத அளவுக்கு காணிகளை இராணுவம் வைத்திருக்கின்றது என்றார்.

## கோட்டா,...

தலைவர் சந்திர ஜயரத்ன, பிரபல இலங்கை நீச்சல் வீரரும் பயிற்சியாளருமான ஜூலியன் பொலிங் மற்றும் ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டர்நஷனல் உட்பட சிலரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

நாட்டைப் பொருளாதார நெருக்கடிக்கு இட்டுச் சென்ற அனைவருக்கும் எதிராக கடுமையான விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரி நெருக்கடி குறித்து ஆராய குழுவை நியமிக்குமாறு கோரியும் மனுதாரர்கள் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜனாதிபதி சார்பில் சட்டமா அதிபர், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான டபிள்யூ.டி.லக்ஷ்மன் மற்றும் அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல, மத்திய வங்கியின் நாணயச் சபை ஆகியோர் உட்பட 39 பேர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## கப்பல் சேவையை...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, யாழ் இந்திய துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா ஆகியோருக்கும் வழங்கும் வகையில் அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இலக்கிய நூல்களின் பிரகாரம் ஆதிகாலத்தில் பொருளாதாரத்திலும் வாழ்வியலிலும் மிகச் சிறப்பாக விளங்கிய மன்னார் மாவட்டம் தற்போது பொருளாதாரம் வீழ்ச்சியுற்று பின்தங்கிய மாவட்டமாக காணப்படுவதற்கு காரணங்கள் என்ன என்பதை ஆய்வு செய்து அவற்றை காணொளியாக தொகுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பண்டைய காலத்தில் துறைமுக செயல்பாடு, வியாபார நடவடிக்கைகள் மூலம் சிறப்பான பொருளாதாரத்தில் இருந்த மன்னார் மாவட்டம் துறைமுக செயல்பாடுகள் நிறுத்தப் பட்டதன் பின் இவ்வாறு பொருளாதாரத்தில் பின்னடைவை சந்தித்துள்ளது என்ற உண்மை கண்டறியப்பட்டு ஆய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் அதே இலக்கிய நூல்களின் ஆதாரத்துடன் மன்னார் கட்டுக்கரை பகுதி பழங்காலத்தில் பாரிய வரலாற்று வியாபார பண்பாட்டுப் பெருநகரம் பெருநகரமாக இருந்துள்ளது என்பதும் கூறப்பட்டுள்ளது .

மேலும் இந்த காணொளிக்கு வலுச் சேர்க்கும் வகையில் மன்னார் மாவட்டம் பண்டைய காலத்தில் இருந்ததைப் போன்று பொருளாதாரத்தில் வளர்ச்சி பெற்று வியாபார நகரமாக மாறுவதற்காக மீண்டும் தலைமன்னார் - இராமேஸ்வரம் இடையில் முன்பு இருந்ததைப் போன்று கப்பல் சேவை ஒன்றை விரைவாக ஆரம்பிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் வலுவான துறைமுகம் மன்னார் மாவட்டத்தில் அமைக்கப்பட்டால் மன்னார் மாவட்டம் பொருளாதாரத்திலும் வாழ்வியலிலும் உணர்ச்சியடையும் என்று பல முக்கிய பிரமுகர்களும் தங்களது கோரிக்கைகளை காணொளிகளாக பதிவு செய்துள்ளார்கள்.

## முள்ளிவாய்க்கால்...

இதன் முதல் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (09) காலை வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இல்லத்திற்கு அருகில் இடம்பெறும்.

தொடர்ச்சியாக மருதனார்மடம் சந்தியிலும் காரைநகர் இந்துக் கல்லூரி முன்பாகவும் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் முன்பாகவும் சாவகச்சேரி பேருந்து நிலையம் முன்பாகவும் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கப்படவுள்ளது.

புதன்கிழமை(10) காலை கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்பாகவும் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மாங்குளத்திலும் வியாழக்கிழமை (11) மன்னாரிலும் வவுனியாவிலும் கஞ்சி விநியோகிக்கப்படவுள்ளது.

வெள்ளிக்கிழமை (12) கிழக்கு மாகாணத்தின் திருகோணமலையில் சிவன் கோவில், அன்பொளிபுரம், பத்திரகாளி அம்மன் கோவில்,மூதூர் பகுதியிலும் இடம்பெறவுள்ளது.

சனிக்கிழமை (13) மட்டக்களப்பு மாவட்டத்தின் கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசசார பீடத்தின் பங்கேற்புடன் வந்தாறுமூலை வளாகம் முன்பாகவும் செங்கலடி, ஆரையம்பதி, மட்டக்களப்பு பிள்ளையார் கோவில் பகுதியிலும் ஞாயிற்றுக்கிழமை (14) அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் மற்றும் பொத்துவில் கஞ்சி விநியோகிக்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து மே 15 முதல் யாழ்ப்பாணத்தின் பாடசாலைகளை இலக்கு வைத்து முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கப்படவுள்ளது.

## 20 இலட்சம்...

திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சுமார் 83 இலட்சம் வாகனங்களில் ஐந்து வருடங்களுக்கும் மேலாக புதுப்பிக்கப்படாத மற்றும் எவ்வித தகவலும் இல்லாத வாகனங்களின் பதிவு நீக்கப்பட்டு அது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

திறந்த நிலை வாகன பதிவு ஆவணங்களை வைத்திருக்கும் விநியோகஸ்தர்கள் மற்றும் வாகனக் கடத்தலில் ஈடுபடுபவர்களிடமிருந்தும் மக்களைப் பாதுகாப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## களுத்துறை...

"இது மிகவும் பாரதூரமான நிலை, சட்ட அமலாக்கத்தால் மட்டுமே குழந்தைகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்த ப்படமாட்டாது. இந்த பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய பெற்றோர்கள், பாதுகாவலர்கள் மற்றும் உறவினர்களுக்கு பெரும் பொறுப்பு உள்ளது" என்று குறிப்பிட்டார்.

பெற்றோர்கள், பாதுகாவலர்கள் குறிப்பாக இளம் பெண்களுடன் உள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் எந்த வகையான நபர்களுடன் தொடர்பு கொள்கிறார்கள் என்பது குறித்து கவனமாக இருந்தால் இதுபோன்ற துயர சம்பவங்களை தவிர்க்கலாம்" என்றார்.

இதேவேளை, துஷ்பிரயோகம் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் உடனடியாக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்க முடியும் எனவும் பொலிஸ் அவசர இலக்கமான 119க்கு அழைப்பதன் மூலமும் தகவல் வழங்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 24 மணிநேர தொலைபேசி இலக்கமான 1929 க்கு உண்மையான தகவல் இருந்தால் தெரிவிக்கலாம் என்றும், குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# உவர்பரம்பல் அதிகரிப்பு

யது பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில் 1,672 ஹெக்டேயர் நிலப்பரப்பு உவர் நிலங்களாக காணப்படுவதுடன் 643 ஹெக்டேயர் நிலப்பரப்பில் எந்தவித பயிர்செய்கைகளும் மேற்கொள்ள முடியாத நிலங்களாகவே காணப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அதிகளவான விவசாயக் காணிகள் உவர் நிலங்களாக மாற்றமடைந்துள்ளன குறிப்பாக கரையோரப் பகுதிகளிலே காணப்பட்ட உவர்நீர் தடுப்பணைகள் சேதமடைந்துள்ளமை மற்றும் கடல் நீர் உட்புகுதல் என்பவற்றின் காரணமாக உவர்பரம்பல் அதிகரிப்பதாக விவசாய அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.



கிளிநொச்சி மாவட்டதின் உருத்திரபுரம் வன்னேரிக்குளம் பள்ளிக்குடா பூநகரி நல்லூர் ஆகிய பிரதேசங்களில் அதிகளவான நிலப்பரப்பு உவர் நிலங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

மேற்குறித்த பிரதேசங்களில் சுமார் 1,672 ஹெக்டேயர் நிலப்பரப்பு உவர்நில பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 1029 ஹெக்டோயர் நிலப்பரப்பு விவசாயிகளால் பயிர் செய்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு வரும் நிலையில் குறைவான விளைச்சல்களை பெறுவதுடன் சில இடங்களில் மேற்கொள்ளப்படும் பயிர் செய்கைகள் உவர் பாதிப்பு காரணமாக அழிவடைந்தும் வருகின்றன.\

ஏனைய 643 ஹெக்டேயர் நிலப்பரப்பு எந்தவித பயிர் செய்கைகளையும் மேற்கொள்ள முடியாத நிலப்பரப்புகளாக காணப்படுகின்றன எதிர் காலத்தில் மண்டைக்கல்லாற்றுக்கான உவர்நீர்த்தடுப்பணை அமைத்தல் மற்றும் ஏணைய கரையோரப்பகுதிகளில் உவர் நீர்த்தடுப்பணைகளை அமைப்பதன் மூலம் இவ்வாறன உவர் நிலங்களை பயிர் செய்கை நிலங்களாக மாற்றியமைக்க முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.



## இரு வகையான குப்பைகள் அகற்றல்

செ.தி.பெருமாள்

சிவனொளிபாதமலை பருவக் காலம் ஆரம்பிக்கப்பட்டது முதல் நிறைவு பெற்றது வரையும் நல்லத்தண்ணி முதல் நோட்டன் வரையான வீதியின் இருமருங்குகளிலும் கைவிட்டு செல்லப்பட்ட குப்பைகள் அழிக்கப்பட்டன.

பிலாஸ்டிக் போத்தல்கள், பொலித்தீன் உறைகள்,பிலாஸ்டிக் பொருட்கள் ஏனைய குப்பைகள் அகற்றும் பணி கிரிவானேலிய சமூக சேவை மன்றத்தால் ஞாயிற்றுக்கிழமை (07) காலை முதல் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் அனைத்து கழிவுகளும் அந்தந்த பகுதிகளில் வைத்து தீயிட்டு அழிக்கப்பட்டன.

## சலுகைகள் நிறுத்தம்

இரா.யோகேசன்

வட்டவளை லோனக் பாற்பண்ணையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் மற்றும் அத்தோட்டத்திலுள்ள ஏனைய தொழிலாளர்களுக்கு தோட்ட நிர்வாகத்தினால் வழங்கப்படும் சலுகைகள் அனைத்து நிறுத்தப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

குறித்த தோட்ட பாற்பண்ணையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு விபத்தின் போது வழங்கப்படும் சலுகையான வாகன வசதி, அவசர தேவை கருதி வழங்கப்படும் வாகன வசதி ஆகியவை தற்போது நிறுத்தப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் கவலைத் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் தமக்கு வழங்கப்படுகின்ற சலுகைகள் நிறுத்தப்பட்டுள்ளமை குறித்து வெள்ளிக்கிழமை (05) இடம்பெற்ற கலந்துரையாடலில் சில குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற கருத்து மோதலில் ஒருவர் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தமக்கு முறையான தீர்வு கிடைக்காதப்பட்சத்தில் அடுத்த கட்டமாக சில தீர்மானங்கள் எடுக்கவிருப்பதாகவும் தோட்ட தொழிலாளர்கள் எச்சரித்தனர்.

## குட்டியுடன் வந்த யானை மரணம்; குட்டி மாயம்

எப்.முபாரக்

கந்தளாய் வான்எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கருவலகஸ்வெவ பகுதியில் காட்டு யானை ஒன்று இறந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர் .

சூரியபுற பகுதியிலிருந்து ஞாயிற்றுக்கிழமை (07) கருவலகஸ்வெவ பகுதிக்கு குட்டியும் தாயும் வந்ததாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.



அதேசமயம் திங்கட்கிழமை (8) காலையில் யானையொன்று இறந்த நிலையை கண்ட பொதுமக்கள் இது குறித்து கந்தளாய் வனவிலங்கு அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்குச் சென்ற கந்தளாய் வனவிலங்கு அதிகாரிகள் யானையின் குட்டியைத் தேடும்பணியை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## சிவப்பு காருக்குள் என்ன இருந்தது?

மொஹொமட் ஆஸிக்

அனுராதபுரத்தில் இருந்து கண்டி வரைக்கும் பயணித்த அதிசொகுசு காரை மாத்தளை-குடுகல பிரதேசத்தில் நிறுத்திய, திகனை அம்பகோட்டை விசேட அதிரடிப்படையினர் அக்காரை கைப்பற்றி கட்டுகஸ்தோட்டை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அக்காரில் கஞ்சா கடத்தப்படுவதாகக் கிடைத்த தகவலுக்கு அமைய, ஞாயிற்றுக்கிழமை (07) இரவு, வீதி சோதனை சாவடியை நிறுவி, சோதனை நடத்தினர். அதன்போது ஒருதொகை கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது. வாகனத்தின் சாரதி உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## 2 சிறுமிகள் தப்பியோட்டம்

கனகராசா சரவணன்ம

ட்டக்களப்பு, கொக்குவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்திலுள்ள சிறுவர் பராமரிப்பு சீர்திருத்த நிலையம் ஒன்றில் இருந்து வாழைச்சேனையைச் சேர்ந்த 14 வயது சிறுமியும், ஏறாவூரைச் சேர்ந்த 13 வயதுடைய சிறுமியும் திங்கட்கிழமை (08) அதிகாலையில் 2.30 மணியளவில் தப்பி ஓடியுள்ளதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்மா

வட்டத்தில் சிறுவர் திருமணம் மற்றும் பாலியல் துஷ்பிரயோம் மேற்கொள்ளப்பட்ட சிறுமிகளை சீர்திருத்துவதற்காக சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கு நீதிமன்றத்தினால் அனுப்பப்படுவர்.

இந்நிலையில் தப்பியோடிய சிறுமிகள் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குவில் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## ‘கிளை’ வேண்டும்

எம்.எஸ்.எம்.ஹனிபா

பொத்துவில் நகரில் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் (அரச ஒசுசல) கிளை ஒன்றினை திறக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொத்துவில், லாகுகல, பாணம, கோமாரி ஆகிய பிரதேசங்களில் சுமார் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மூவின மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இப்பிரதேசங்களில் வாழும் மக்கள் அவர்களுக்கு தேவையான மருந்து வகைகளை பெருமளவில் தனியார் மருந்து விற்பனை நிலையங்களிலேயே கொள்வனவு செய்து வருகின்றனர்.

அரச ஒசுசல கிளை ஒன்று இல்லாமையினால் தமக்குத் தேவையான மருந்துகளை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

## அறிவுறுத்தல்



எம். எஸ். எம். நூர்தீன்

காத்தான்குடி பிரதேச செயலகத்தில் `வேலைத் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்` காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் திங்கட்கிழமை (08) நடைபெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் உதய சிறீதர் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எம.ஜரூப் சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திருமதி பத்மா ஜெயராஜ் உட்பட கிராம உத்தியோகத்தர்கள் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். இதன் போது உணவு பாதுகாப்பு தொடர்பான ஆய்வு நடவடிக்கை முன்னேற்றம் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. உணவு பாதுகாப்பு தொடர்பான விண்ணப்பங்களை விரைவாக பூர்த்தி செய்யுமாறு பிரதேச செயலாளர் உதய சிறீதர் அறிவுறுத்தல்களை வழங்கினார்.



## முத்திரை சந்தியில் கோரம்: பெண் படுகாயம்

நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ் நல்லூர் ஆலயத்திற்கு முன்பக்கமாகவுள்ள பருத்திதுறை வீதியும் செம்மனி வீதியும் இணைகின்ற முத்திரை சந்தியில் திங்கட்கிழமை (08) காலையில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

வீதியில் தரித்து நின்றிருந்த கார் திடிரென சடுதியாக திருப்ப முற்பட்ட போது துவிச்சக்கர வண்டியில் வந்து கொண்டிருந்த பெண் மீது மோதியதில் இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் துவிச்சவண்டியில் பயணித்த பெண் பலத்த காயமடைந்த நிலையில் அப்பகுதியில் இருந்தவர்கள் அவரை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சிறுபான்மையின தலைவர்களை ஒரே மேசைக்கு அழைப்பதே உசிதம்

நாட்டின் 75ஆவது சுதந்திர தினமான பெப்ரவரி 04 ஆம் திகதியன்று, இனப்பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத்தரப்படுமென பாராளுமன்றத்தில் வைத்து அறிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டு மக்களுக்கு அன்றிரவு ஆற்றிய உரையில், அந்த விவகாரத்தை தொட்டுக்கூடச் செல்லவில்லை.

இவ்வருடத்தின் (2023) இறுதிக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமென அண்மையில் அறிவித்திருந்தார். யுத்தம் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பேச்சுக்கள், அவ்வப்போது ஆரம்பிக்கப்பட்டு, இடையில் கைவிடப்பட்டன. பின்னர் தூசு தட்டப்பட்டன. அதனோர் அங்கமாகவே இவ்வழைப்பை நோக்கலாம்.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு எந்தவோர் அரசாங்கமும் முழு மூச்சுடன் களத்தில் இறங்கவில்லை. இல்லையேல், தொட்டிலையும் ஆட்டிவிட்டு பிள்ளையையும் கிள்ளிவிடும் காரியத்தையே செய்கின்றது எனலாம். இனப்பிரச்சிக்குத் தீர்வு காண்பேன் என்ற ஜனாதிபதி ரணில், 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவேன் என்றார்.

இதன்போது கொதித்தெழுந்த தென்னிலங்கை இனவாத அரசியல்வாதிகள், பௌத்த தேரர்கள் சிலர், “நாட்டை துண்டாட முனைகின்றார்”, “13ஐ அமுல்படுத்த விடமாட்டோம்”, “தீக்குளிப்போம்” என்று கொக்கரிக்கத் தொடங்கினர். இதற்கிடையே பௌத்த பீடங்களும் போர்க்கொடி தூக்கின. அதன்பின்னர் “13” தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் மௌனித்துவிட்டன.

இந்நிலையில்தான், வடக்கிலுள்ள பிரச்சினைகள் மற்றும் அபிவிருத்தி சம்பந்தமாக 11,12 மற்றும் 13ஆம் திகதிகளில் கலந்துரையாட வடக்கு தமிழ்க் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். பிரச்சினைகளில் பிரதான பிரச்சினை, இனப்பிரச்சினையாகும். அப்படியாயின் கிழக்கு தமிழ்க் கட்சிகளின் தலைவர்களையும் கட்டாயமாக அழைக்கவேண்டும்.

பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான அழைப்பு இதயசுத்தியுடன் விடுக்கப்பட்டுள்ளது என்றால், சிறுபான்மையின கட்சிகளின் தலைவர்கள் அனைவரையும் ஒரே மேசைக்கு அழைத்திருக்க வேண்டும். மாவட்ட அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாட வேண்டுமாயின் அதற்கு பல தளங்கள் உள்ளன. உதாரணமாக மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை கூறலாம்.

பிரித்தாளுவதிலும் உள்வீட்டுக்குள் குழப்பங்களை ஏற்படுத்துவதிலும், பிரச்சினைகளை திசைதிருப்பி விடுவதிலும், கையாளுவதிலும், ஏன்? பிரச்சினைகளை தீர்ப்பதிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைதேர்ந்தவர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்கு மேயராக போட்டியும் முஜிபுர் ரஹ்மான், தனது எம். பி பதவியை இராஜினாமா செய்யமுட்பட்ட போது, இராஜினாமா செய்யவேண்டாமென தொலைபேசி அழைப்பை எடுத்து தான் கூறியதாக சபையில் வைத்து தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், வடக்கு, கிழக்கு கட்சிகளின் தலைவர்களை தனித்தனியாக சந்தித்தால், இவ்விரு தரப்பினர்களின் பிரச்சினைகள் வேறுவேறானவை என கூறக்கூடும். இதற்கிடையில், சிறுபான்மையின கட்சிகளின் ஏனைய தலைவர்களை தனித்தனியாக அழைத்து காலத்தை கடத்தவும் கூடும்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதய சுத்தியுடன் களமிறங்கியிருந்தால், சிறுபான்மையின கட்சிகளின் தலைவர்கள் அனைவரையும் அழைத்து ஒரே மேடையில் அமரச் செய்வதே உசிதம்.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

ஞானத்தைத் தேடுபவர்களில் பலர் ஆசைகளைப் பெருக்கியபடியேதான் இருக்கின்றார்கள். ஞானம் என்பது கடைச்சரக்கு அல்ல; அறிவுக்கும் மேலான மெய் அறிவு.

சாதாரணமான விடயமாக ஆன்ம ஞானத்தை நினைத்தலாகாது. பூரணத்துவமானவர்கள் மௌனமானவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால், அதிகம் பேசி மக்களைக் குழப்பும் ‘சுவாமி’கள் என்று தங்களைத் தாங்களே முத்திரை குத்திக் கொள்பவர்கள் அதிகமாகி விட்டார்கள்.

எதையும் எதிர்பாராத, சுயநலன் எதுவும் அற்ற, ஆசைகளோடு இணையாத, தூயநெஞ்சு உடைய மனிதனே, ஆன்மிகம் பற்றிப் பேசுவதற்கு உரிமை உள்ளவன் ஆவான்.

செல்வம், புகழ், அதிகாரம் உள்ளவர்கள் பின்னால் செல்பவர்களால், ஆன்ம அறிவு பெறுவது எப்படி?

சகல கல்வியறிவையும் மக்கள் தேடிப் பெற வேண்டும். கல்வி ஒருவருக்கு அவசியமானது. பெற்ற கல்வியைப் புனிதமாகக் கொண்டு இயங்க வேண்டும்.

எளியோருக்கு இரங்குதல், வசதியற்றவர்களுக்கு இலவச கல்வியூட்டல், பொதுநல சேவை எல்லாமே தர்மத்துடன் இணைந்தவை. ஆன்ம எழுச்சியை உருவாக்குக!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

ஜனாஸா எரிப்பு தொடர்பான

# அரசின் ஒப்புதல் வாக்குமூலம்

**மொஹமட் பாதுஷா**

அரசியல்வாதிகள், ஆட்சியாளர்களால் மட்டுமன்றி அரச இயந்திரத்தாலும் ஒரு காலத்தில் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி எடுக்கப்படுகின்ற தீர்மானத்தை பின்னொரு நாளில் அவர்களே “தவறு” என ஒப்புக் கொள்வது நமக்குப் புதிதல்ல.

ஆனால், இது வழக்கமானதும் நமக்குப் பழகிப் போனதும் என்றால் கூட, எல்லாத் தவறுகளையும் பொறுத்துக்கொண்டு இருக்;க முடியாது என்பதுதான் இங்கு முக்கியமானது. அதாவது, ஒட்டுமொத்த நாட்டு மக்களை அல்லது ஒரு சமூகப் பிரிவை இலக்குவைத்து மேற்கொள்ளப்படுகின்ற வன்மத்தனமான, முட்டாள்தனமான முடிவுகளை கண்டும் காணாமல் கடந்து செல்ல இயலாது.

பாராளுமன்றத்தில் கடந்தவாரம், முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் றவூப் ஹக்கீம் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளித்து உரையாற்றிய அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, “கொவிட் 19 வைரஸ் தொற்றுக்குள்ளான உடல்களை எரிக்கும் விடயத்தில் சம்பந்தப்பட்ட நிபுணர்கள் குழு மக்களை தவறாக வழிநடாத்தியுள்ளதை ஏற்றுக் கொள்வதாக குறிப்பிட்டமை இந்த வகையைச் சார்ந்த தவறாகவே தோன்றுகின்றது.

இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்ட போது கோட்டபாய அரசாங்கத்திலும் பலம் வாய்ந்த அமைச்சராக இருந்த ஒருவரே இப்போது இதனைக் கூறுகின்றார் என்றாலும், இது வெறுமனே கெஹலியவின் கருத்தல்ல. அதனை யாரும் சபையில் மறுதலிக்கவும் இல்லை. எனவே இது ஒட்டுமொத்த மொட்டு அணியின், ஆட்சியாளர்களின் ஒப்புதல் வாக்குமூலமாகவே கருதப்பட வேண்டியுள்ளது.

இந்தப் பின்னணியில், கொரோனா தொற்றுக்குள்ளாகிய நிலையில் வலுக்கட்டாயமாக எரிக்கப்பட்ட முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் தொடர்பில் நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்றும், இந்த முடிவுக்கு காரணமாக இருந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் முஸ்லிம் சமூகத்தில் இருந்து குரல்கள் எழுகின்றன.

இதனை அரசாங்கமோ அல்லது நிபுணர்கள்குழுவோகண்டுகொண்டதாகவோ அன்றேல் பொறுப்புக்கூறலுடன் கையாண்டதாகவோ தெரியவில்லை. இலங்கைச் சூழலில் அது சாத்திமில்லை என்பது நாமறிந்த சங்கதிதான்.

இருப்பினும், ஜனாஸா எரிப்பு என்பது ஒரு தவறான முடிவு என்பதை இந்த உலகமே சப்தமிட்டுச் சொன்ன போது அப்போதைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த, அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி மற்றும் அவர்களால் நியமிக்கப்பட்ட அதிமேதாவித்தனமான நிபுணர்கள் குழு என்பன அதனை காதில் வங்கிக் கொள்ளவில்லை.

அப்போது இவ்விடயத்தில் சமூகப் பொறுப்புடன், உண்மையான நியாயத்துடன் செயற்படாத இத் தரப்பினர் இப்போது பொறுப்புக்கூறலில் இருந்து விலகி ஓடுவதற்கு அல்லது இதனை ஒரு சிறிய விடயமாக கருதி விட்டுவிடுவதற்கு எத்தனிக்கின்றனர் என்பது வெளிப்படையானது. இதனை கொஞ்சம் கூட ஏற்றுக் கொள்ளவே முடியாது!

2020 இல் கொவிட் 19 வைரஸ் பெருந்தொற்று உலகெங்கும் ஏற்பட்டது. உலகில் எல்லா நாடுகளிலும் பெருமளவு மரணங்கள் பதிவு செய்யப்பட்டன. ஆனால் சீனாவைத் தவிர மற்றெல்லா நாடுகளிலும் உடல்களை நல்லடக்கம் செய்வதற்கும் அரசாங்கங்கள் அனுமதி அளித்தன.

உலகுக்கு மருத்துவம் தொடர்பான வழிநடாத்தலை வழங்கும் உலக சுகாதார ஸ்தாபனம் போன்ற அமைப்புக்கள் நிலத்தில் உடல்களை புதைப்பதற்கும் குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ் அனுமதி வழங்கலாம் என பரிந்துரை செய்திருந்தன.

விஞ்ஞானத்தை உலகிற்கு அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கும் நாடுகளும், இலங்கையை விட அதிக, அறிவுள்ள உண்மையான நிபுணர்கள் நிரம்பி வழிகின்ற தேசங்களும் கொவிட்டினால் இறந்தவர்களின் அவரவர் விருப்பப்படி இறுதிக் கிரியைகளுக்கு உட்படுத்துவதற்கு அனுமதி அளித்திருந்தன.

ஆனால், எல்லாவற்றிலும் உலக ஒழுங்கோடு ஒன்றித்துப் பயணித்த இலங்கை உடல்களை எரிக்கின்ற விடயத்தில் மட்டும் உலக ஒழுங்கிற்கு மாற்றமான வழியில் சென்றது. சர்வதேச நாடுகளும் விஞ்ஞானிகளும் மண்ணியலாளர்களும் சொன்ன விஞ்ஞான விளக்கங்களை எல்லாம் குப்பைத் தொட்டியில் போட்டிடுவிட்டு ராஜபக்ஷ கூட்டம் தமது முயலுக்கு மூன்று கால்கள் என்று சொன்னது.

இலங்கை போன்ற நாடுகளில் உடல்களை நிலத்தில் புதைப்பதன் ஊடாக நிலத்திற்கு அடியில் வைரஸ் தொற்று பரவக் கூடிய வாய்ப்பு இருப்பதாக நிபுணர் குழுவும் சுகாதார அமைச்சர் பவித்திராவும் அரசாங்கமும் ஒரு கற்பிதத்தை சொன்னது.

நீலிகா மாளவிகே உள்ளிட்ட பல சிங்கள நிபுணர்கள் அப்படி எந்தப் பாதிப்பும் நடக்காது என்று தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். இறந்த உடலில் இருந்து வைரஸ்கள் பரவ மாட்டாது என்ற அடிப்படை விஞ்ஞானத்தைக் கூட பொறுப்புவாய்ந்தவர்கள் விளங்கிக் கொண்டதாக தெரியவில்லை.

மாறாக, மெத்திகா விதானகே போன்றவர்கள் கூறிய கற்பனைக் கதைகளை மக்களுக்குச் சொல்லி பயம் காட்டி, உடல்களை வலுக்கட்டாயமாக எரிக்கும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்பட்டன.

உடல்கள் நிலத்தில் புதைக்கப்படுவதை தமது சமய அனுஷ்டானமாக கடைப்பிடித்து வந்த இலங்கையர்கள் அனைவருமே இந்த தீர்மானத்தின் காரணமாக. பெரும் கவலைக்கும் மன அழுத்தத்திற்கும் உள்ளாகினர். கட்டாய உடல் எரிப்பினால் அதிகம் இழப்புக்களையும் வலியையும் சந்தித்தவர்கள் முஸ்லிம்கள் என்பதை உலகே அறியும்.

இவ்வாறு செய்ய வேண்டாம் என்றும், ஜனாஸாக்களை ஒரு தூரப் பிரதேசத்திலேனும் நல்லடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்குமாறு 20 இலட்சம் இலங்கை முஸ்லிம்கள் மன்றாட்டமாக வேண்டி நின்றனர்.

ஆனால் இனவாதத்தின் துணைகொண்டு, அதிகார வேட்கையின் உச்சாணிக் கொம்பில் நின்று தலைகால் புரியாமல் ஆடிக் கொண்டிருந்த ராஜபக்ஷக்கள் நியாயத்தின் அடிப்படையிலோ, மனிதாபிமானத்தின் அடிப்படையிலோ, முஸ்லிம்களின் வாக்குகளும் தமக்கு வேண்டும் என்ற அடிப்படையிலோ ஒரு நெகிழ்வுப் போக்கை கடைப்பிடிக்கவில்லை.

கொவிட் வைரஸ் பற்றிய தெளிவின்மையும் மரணப் பயத்தையும் பயன்படுத்தி சிறுபான்மை முஸ்லிம்கள் மீது ஒரு வன்மத்தை கக்குவதற்கான சந்தர்ப்பமாக இதனை கோட்டபாய அரசாங்கம் பயன்படுத்தியது என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் ஒரு கட்டத்தில் விரும்பியோ விரும்பாமலோ உலக நியாயங்களை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஜனாஸா எரிப்புக்கு எதிராக முஸ்லிம்கள் மட்டுமன்றி அனைத்து இன, மத குழுமங்களையும் சேர்ந்த மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடினார்கள். அரபு நாடுகள் உள்ளிட்ட பல உலக நாடுகள் அமைப்புக்களின் அழுத்தங்கள் அதிகரித்தன. அத்துடன், ஜனாஸாக்களை எரிப்பது அரசியல் தீர்மானம் என்பதையும் அவற்றை நிலத்தில் புதைப்பதால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்பதை அரசாங்கமும் அதிகாரிகளும் தம்மளவில் அறிந்திருந்தனர்.

அதன் பிறகுதான் உடல்களை நல்லடக்கம் செய்வதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியது. இது இதயத் சுத்தியுடன் அல்லது முஸ்லிம்கள் மற்றும் கத்தோலிக்கர்களின் உரிமைகளை மதிக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் அரசாங்கம் வழங்கிய அனுமதி என்று இதனைக் கொள்ள முடியாது. மாறாக, வேறு வழியின்றி இந்த முடிவுக்கு அரசாங்கம் வந்தது எனலாம்

இதன்படி பலரது முயற்சிகளின் பலனாக ஓட்டமாவடி, மஜ்மா நகரில் ஜனாஸாக்களை அடக்கும் வாய்ப்புக் கிடைத்தது. கொரோனாவின் கடைசி அலை முடிவடையும் வரை மஜ்மா நகரில் 3634 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. இதில் சுமார் 2,992 பேர் முஸ்லிம்கள். அதுமட்டுமன்றி, 237 பௌத்தர்கள், 270 இந்துக்கள், 85 கத்தோலிக்கர்களின் உடல்களும் நெருப்பில் இருந்து தப்பி வந்து, மஜ்மா நகரில் அடக்கப்பட்டுள்ளன.

ஆனால், இலங்கையிலோ உலகின் வேறு நாடுகளிலோ உடல்களை நிலத்தில் புதைத்ததால் ஏதேனும் ஆபத்து வந்ததாகவோ, இலங்கை நிபுணர் குழு ஆரம்பத்தில் சொன்னது போன்று நிலத்திற்கு கீழால் வைரஸ் பரவியதாகவோ எங்கும் இதுவரை எந்தச் சம்பமும் பதிவாகவில்லை.

ஆக, அவர்கள் சொன்ன காரணங்கள், விஞ்ஞான விளக்கங்கள் எல்லாம் பொய்யாகி விட்டதை முழு இலங்கை மக்களும் தெட்டத் தெளிவாக உணர்ந்து கொண்ட பின்னர், இப்போதுதான் நிபுணர் குழுவின் வழிநடாத்தல் தவறு என்று அரசாங்கம் சொல்கின்றது.

காலம் பிந்தியாவது உடல்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி அழித்ததும், அதேபோன்று இப்போதாவது உண்மையை ஏற்றுக் கொள்வதும் வரவேற்கத்தக்க விடயமே. ஆனால், இதனை இப்படியே விட்டுவிட முடியாது.

இக் கட்டாய ஜனாஸா எரிப்பினால் முஸ்லிம் சமூகம் பட்ட துன்பங்களும் வலியும் மன அழுத்தமும் கொஞ்சநஞ்சமல்ல. நூற்றுக்கணக்கான முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அவர்களது அடிப்படை உரிமைப்படி, மத நம்பிக்கையின் படி அடக்க முடியாமல் போனது, அவர்களது உடல்கள் குடும்பத்தாரின் விருப்பமின்றியே தீக்கிரையாக்கப்பட்டன என்பதும் சாதாரணமான விடயமல்ல.

இதற்குப் பின்னால் இருந்த இனவாதம், வன்மம் எல்லாவற்றையும் உலகே அறியும். எனவே, இது விடயத்தில் பொறுப்புக்கூறல் நிலைநாட்டப்பட வேண்டும். புறழையான முடிவை எடுத்த நிபுணர்கள், அரசியல்வாதிகள், அதிகாரிகள், ஆட்சியாளர்கள் எல்லோரும் நீதி தேவதையின் முன்னால் நிறுத்தப்பட வேண்டும்.

## கடிதங்கள்

### 7,313 குடும்பங்களுக்கு உணவு நெருக்கடி

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்ந்து வரும் கூடுதலான குடும்பங்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களாக காணப்படுகின்றன இவ்வாறான நிலையில் மாவட்டத்தில் எழாயித்து 313 குடும்பங்கள் உணவு நெருக்கடிகளை எதிர் கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் நான்காயிர்த்து 50 குடும்பங்களும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 546 குடும்பங்களும் பூனகரி பிரதேச செயலாளர் பிரிவில் 390 குடும்பங்களும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரவில் ஆயிரத்து 327 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் கரைச்சியில் 54 வரையான ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவர்களும் ஐந்து வயது முதல் 16 வயது வரையான ஆயித்து 234 சிறுவர்களும் கண்டாவளையில் 180 வரையான ஐந்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்களும் ஐந்து வயது முதல் 16 வயது வரையான 704 சிறுவர்களும் பூநகரியில் 261 வரையான ஐந்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்களும் ஐந்து வயது முதல் 16 வயது வரையான 507 சிறுவர்களும் பச்சிலைப்பள்ளியில் 73 வரையான ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவர்களும் ஐந்து வயது முதல் 16 வயது வரையான 320 சிறுவர்களும் போசக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 318 வரையான கர்ப்பிணி தாய்மார்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யது பாஸ்கரன்

# குறையாத கவர்ச்சி





கவர்ச்சிக்கு பெயர்போன நடிகை ஷேரயா சரண் தற்போது திருமணம், குழந்தை என்று பிசியான பிறகு விருது நிகழ்ச்சி ஒன்றில் அணிந்திருந்த உடையைப் பார்த்த ரசிகர்கள் கலவையான விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றனர்.

'எனக்கு 20 உனக்கு 18' திரைப்படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் நடிகை ஷேரயா சரண். சிவாஜி படத்தில் இவருடைய நடிப்பை பார்த்த ரசிகர்கள் பெரும் வரவேற்பை அளித்திருந்தனர்.


இந்நிலையில் பிரபல டென்னிஸ் வீரரை திருமணம் செய்துகொண்ட நடிகை ஷேரயா குழந்தை பெற்றுக்கொண்ட பிறகும் தொடர்ந்து சினிமாவில் கவனம் செலுத்தி வருகிறார்.

ஒருசில ஹிந்தி படங்களில் நடித்துவரும் இவர் நேற்று முன்தினம் மும்பை நகரில் நடைபெற்ற விருது வழங்கும் விழா ஒன்றில் கலந்துகொண்டுள்ளார்.

அப்போது இவர் கருப்பு மற்றும் வெள்ளை நிறத்திலான உடையை அணிந்திருந்தார். இந்தப் புகைப்படத்தைப்பார்த்த ரசிகர்கள் சிலர் இவருக்கு 40 வயது என்றால் நம்ப முடிகிறதா? என்று கருத்து பதிவு செய்துள்ளனர். இன்னும் சிலர் விருது நிகழ்ச்சியில் இவ்வளவு கவர்ச்சி தேவையா? என்றும் விமர்சித்துள்ளனர்.

# அஜித்தின் விடாமுயற்சி





வலிமை படத்தை தொடர்ந்து அஜித் நடிக்கும் திரைப்படத்தை மகிழ்த்திருமேனி இயக்குகிறார். இத் திரைப்படத்துக்கு 'விடாமுயற்சி' என பெயர் வைக்கப்பட்டுள்ளதாக தயாரிப்பு நிறுவனம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் குறித்த அறிவிப்புகள் விரைவில் வெளியாகவுள்ளதுடன், விடாமுயற்சி திரைப்படத்தின் படப்பிடிப்பு குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி படப்பிடிப்பு வருகிற மே 22ம் திகதி சென்னையில் தொடங்கவுள்ளதாகவும், அஜித் நேபாள் மற்றும் பூட்டான் சுற்றுலாவை முடித்த பிறகு இதில் இணைவார் எனவும் கூறப்படுகிறது.

மேலும் விடாமுயற்சி திரைப்படத்தின் படப்பிடிப்பை 70 நாட்கள் நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் இதில் அஜித்தின் பகுதி 40 நாட்கள் படப்பிடிப்பை நடத்த முடிவு செய்துள்ளதாகவும் சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.




# உண்மை சம்பவத்தை தழுவிய

'கூடு'


அறிமுக இயக்குனர் ஜோயல் விஜய் இயக்கத்தில் உருவாகியிருக்கும் திரைப்படம் 'கூடு'. ஸ்கைமூண் எண்டர்டெயின்மெண்ட் நிறுவனம் மற்றும் ஏ எண்டர்டெயின்மெண்ட் சார்பில் எம்.கணேஷ் மற்றும் கண்ணன்.பி ஆகியோர் இணைந்து தயாரித்துள்ளனர்.

உண்மை சம்பவத்தை தழுவி உருவாகியிருக்கும் 'கூடு' படத்தின் தலைப்பு லுக் மற்றும் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது.

இப்படம் தமிழ், தெலுங்கு, ஹிந்தி, கன்னடம், மலையாளம் உள்ளிட்ட மொழிகளில் வெளியாகவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்படத்தில் நடிக்கும் நடிகர், நடிகைகள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் பற்றிய விவரங்கள் விரைவில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# குஷ்புவின் பதிலடி



நடிகை குஷ்பு திருமணத்துக்காக மதம் மாறினார் என்று திடீரென நெட்டிசன்கள் சமூக வலைதளங்களை பதிவு செய்து வரும் நிலையில் அதற்கு குஷ்பு தனது ட்விட்டர் பக்கத்தில் பதிலடி கொடுத்துள்ளார்.

எனது திருமணத்தை பற்றி கேள்வி கேட்பவர்கள், நான் என் கணவரை திருமணம் செய்ய மதம் மாறிவிட்டேன் என்று கூறுபவர்கள், தயவுசெய்து கொஞ்சம் அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்.

நம் நாட்டில் இருக்கும் சிறப்பு திருமணம் சட்டம் குறித்து அவர்கள் கேள்விப்பட்டதே இல்லை என்பது துரதிஷ்டமே. திருமணத்திற்காக நான் மதம் மாறவும் இல்லை, மதம் மாற என்னை யாரும் வற்புறுத்தவும் இல்லை.

எனது 23 வருட திருமண நம்பிக்கை மரியாதை, சமத்துவம் மற்றும் அன்பின் அடிப்படையில் உருவானது என்று தெரிவித்துள்ளார். குஷ்புவின் இந்த பதிவு வைரல் ஆகி வருகிறது.

# த்ரிஷாவுக்கு சர்ப்ரைஸ்



தளபதி விஜய் நடிப்பில், இயக்குநர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில், அனிருத் இசையில் உருவாகி வரும் திரைப்படம் 'லியோ'. தற்போது சென்னையில் அடுத்த கட்ட படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது.

கடந்த சில நாட்களாக 'பொன்னியின் செல்வன் 2' படத்தின் புரோமோஷன் பணிகளுக்கு சென்றிருந்த நடிகை த்ரிஷா தற்போது 'லியோ' படத்தின் படப்பிடிப்பில் இணைந்து உள்ளார்.

அவர் படப்பிடிப்பில் கலந்து கொள்ள வந்த போது படக்குழுவினர் அவருக்கு சர்ப்ரைஸ் அளிக்கும் விதமாக பிறந்தநாள் கேக் ஏற்பாடு செய்திருந்தனர்.

கடந்த நான்காம் திகதி நடிகை த்ரிஷா தனது 40வது பிறந்தநாளை கொண்டாடிய நிலையில் விஜய்யுடன் த்ரிஷா இருக்கும் சிறப்பு போஸ்டர் படக்குழுவினர் வெளியிட்டனர்.

இந்த நிலையில் தற்போது மீண்டும் அவர் 'லியோ' படத்தின் படப்பிடிப்புக்கு வந்த போது பிறந்தநாள் கேக் ஏற்பாடு செய்து அவரை சர்ப்ரைஸ் அடைய செய்தனர்.



# கௌரவிக்கும் நிகழ்வு



வட்டவளை தமிழ் மகா வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் ஆசிரியர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (07) நடைபெற்றது.

இரா.யோகேசன்







# மாநாடு



இலங்கை கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தின் 79 ஆவது தேசிய இளைஞர் சம்மேளன மாநாடு யாழ் மறை மாவட்டத்தில் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் வெள்ளிக்கிழமை(5) ஆரம்பமாகி ஞாயிற்றுக்கிழமை(7) மாலை நிறைவடைந்துள்ளது.

இலங்கையின் 12 மறை மாவட்டங்களையும் உள்ளடக்கி பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

–இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் இளைஞர் பணிக்காக நியமிக்கப்பட்ட கொழும்பு துணை மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி அன்ரன் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் ஆரம்பமானது.

ரொசேரியன் லெம்பட்







# விளக்கு வைக்கும் வைபவம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் எழுந்தருளி அடியவர்களுக்கெல்லாம் அருள்பாலித்து வரும் புதுக்குடியிருப்பு அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த உட்சவம் கடந்த திங்கட்கிழமை (01) விளக்கு வைக்கும் வைபவத்துடன் ஆரம்பானது. வருடாந்த பொங்கல் உட்சவம் இன்று (08) இடம்பெறவுள்ளது

சண்முகம் தவசீலன்



# கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு



மாணவர்களின் கல்விக்கு வறுமை தடையாக அமையக்கூடாது என்ற நோக்கில் இணைந்த கரங்கள் அமைப்பினால் நாடு தழுவிய ரீதியாக பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், புத்தகப்பை என்பன வழங்கப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக அம்பாறை மாவட்ட திருக்கோவில் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் அதிகஷ்ட மற்றும் தொழில் வாய்ப்பற்ற குறைந்த வருமானத்தில் வாழும் குடும்ப மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நூருல் ஹுதா உமர்





# துறவற தினவிழா



முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 99 ஆவது துறவற தின விழா கடந்த வெள்ளிக்கிழமை (6) காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

வி.ரி. சகாதேவராஜா



கேரளா

# 33 பேரின் உயிரைப் பறித்த உல்லாசப் படகு

உல்லாசப்படகொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 22 பேர் உயிரிழந்த சம்பவம் கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் பரப்பனங்காடி கடற்கரை பகுதியிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இரண்டு அடுக்கு கொண்ட குறித்த படகில் 50-க்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் பயணித்துள்ளனர் எனவும், திடீரென அப்படகு கவிழ்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளாவை உலுக்கிய இவ் விபத்துக்கு அதிகப்படியான பயணிகளை ஏற்றி சென்றமையே காரணம் என முதல் கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் இவ்விபத்தில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு ரூ.2 லட்சம் நிவாரணமாக வழங்கப்படுமென பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.




அமெரிக்கா

# பழங்கால சிலையில் மடிக் கணினி

பழங்கால சிலையொன்றின் புகைப்படமொன்று அண்மைக்காலமாக இணையத்தில் வைரலாகி வருகின்றது.

சுமார் 37 அங்குலம் கொண்ட இச்சிலையில் மடிக் கணினி போன்ற அமைப்பொன்று இருப்பதே வைரலானமைக்காண காரணமாகக் கூறப்படுகின்றது.



இச்சிலை பண்டைய கிரேக்க காலத்தைச் சேர்ந்ததாகக் கூறப்படுவதோடு டைம் டிராவல் மீது நம்பிக்கை கொண்ட மக்கள் மத்தியில் இது ஒருவித பீதி ஏற்படுத்தியுள்ளது.

இச்சிலையானது தற்போது அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

## மாணவியின் உள்ளாடையை அகற்றுமாறு கூறிய அதிகாரி



மருத்துவ கல்லூரிகளில் மாணவர்களை இணைப்பதற்கான நீட் பரீட்சை இந்தியா முழுவதும் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இப்பரீட்சையை எழுதுவதற்காக நாடு முழுவதும் 20 ,87 ,445 பேர் விண்ணப்பித்திருந்தனர். குறிப்பாக தமிழ்நாட்டை பொறுத்தவரையில் 1, 47 ,581 பேர் விண்ணப்பித்திருந்தனர்.

அதேசமயம் பரீட்சை மையத்தில் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு இருந்தன. அதன்படி, மாணவ-மாணவிகள் தீவிர பரிசோதனைக்கு பிறகே பரீட்சை மையத்துக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், சென்னையில் பரீட்சை மையமொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது மாணவி ஒருவரின் உள்ளாடையை அதிகாரிகள் அகற்றுமாறு கூறிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த மாணவியை சோதனையிட்டபோது அவர் அணிந்திருந்த ஆடையில் இருந்து ஒலி எழுந்துள்ளதாகவும், இதனையடுத்து மாணவியின் உள்ளாடையின் மீது சந்தேகம் எழுந்துததால் சோதனையில் ஈடுபட்ட அதிகாரிகள் அவரை உள்ளாடையை அகற்றுமாறு வற்புறுத்தியதாகக் கூறப்படுகிறது. இதனையடுத்து அந்த மாணவி உள்ளாடையை அகற்றிய பின்னரே பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் இது குறித்த விசாரணைகள் இடம்பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## சுய இன்பம் செய்த நபர் கைது

மெட்ரோ ரயிலில் நபர் ஒருவர் சுயஇன்பம் செய்யும் வீடியோவொன்று இணையத்தில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

டெல்லியில் உள்ள மெட்ரோ ரயில் ஒன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்நிலையில்"இது அருவருப்பானதும் வேதனைத்தருவதுமாக இருக்கிறது. இந்த இழிவான செயலுக்கு கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு டெல்லி பொலிஸார் மற்றும் மெட்ரோ நிர்வாகத்துக்கு உத்தரவிட்டுள்ளேன் என மகளிர் ஆணையத் தலைவர் ஸ்வாதி மலிவால் கூறியிருந்தார்.

அதே சமயம் "பயணிகள் மெட்ரோவில் கண்ணியமாக நடந்துகொள்ள வேண்டும். சக பயணிகள் கண்டிக்கத்தக்க நடவடிக்கைகளில் ஈடுபடும் போது DMRC ஹெல்ப்லைனில் புகாரளிக்க வேண்டும்" என மெட்ரோ நிர்வாகம் கூறியுள்ளது.

மேலும், மெட்ரோவில் கண்காணிப்பு பணிகளைத் தீவிரப்படுத்தும் விதமாக பறக்கும் படையினரை அதிகப்படுத்தவும் மெட்ரோ முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான்



## ஆபாசமாகப் புகைப்படம் எடுத்தால் 3 ஆண்டுகள் சிறை

பாலியல் வன்முறை மற்றும் பாலியல் வல்லுறவுக்கு எதிரான நடவடிக்கையை ஜப்பான் அரசு தீவிரப்படுத்தி வருகின்றது.

குறிப்பாக திருமணத்துக்கான வயதை அதிகரிப்பது, பாலியல் வல்லுறவு பற்றிய வரையறையை மறுசீரமைப்பது, தண்டனையை கடுமையாக்குவது உள்ளிட்ட பல்வேறு சீர்திருத்தங்களை அந்நாட்டு அரசு மேற்கொண்டு வருகின்றது.

அதன் ஒரு பகுதியாக, மற்றவர்களின் முறையான ஒப்புதலின்றி பாலியல் மோகத்துடன் புகைப்படங்கள், வீடியோக்களை எடுக்க தடை விதிக்கும் மசோதாவை ஜப்பான் நாடாளுமன்ற கொண்டு வர திட்டமிட்டுள்ளது.

இதன் மூலம் பாலியல் இச்சையைத் தூண்டக்கூடிய வகையில் புகைப்படம் எடுப்பதை இச்சட்டம் தடை செய்கிறது. அத்துடன் ஒரு பெண் உடை மாற்றும்போதோ அல்லது பாலுறவில் இருக்கும்போதோ அவரை ரகசியமாக படம்பிடிப்பது மற்றும் அனுமதியின்றி, ஒருவரின் பிறப்புறுப்பை புகைப்படம் எடுப்பது, அதனை சமூக வலைதளங்களில் வெளியிடுவது ஆகியவற்றை இது தடை செய்கிறது.

மேலும், ஒரு புகைப்படத்தை மார்பிங் செய்து ஆபசமாக மாற்றுவதும் குற்றமாக்க பரிந்துரைக்கிறது. குறிப்பாக, எந்தவித நியாய காரணமின்றி, குழந்தைகளை பாலியல் காரணங்களுக்காக படம் பிடிப்பதை இச்சட்டம் முற்றிலும் தடை செய்கிறது.

குற்றவாளிகளுக்கு மூன்று ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அல்லது 3 மில்லியன் ஜப்பானிய யென் (17,500; $22,000) வரை அபராதம் விதிக்கப்படும்எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா



## சுண்டெலி பர்கர் உண்டவருக்கு அதிர்ஷ்டம்

சுகாதார விதிகளை மீறி செயற்பட்ட மெக் டொனால்ஸ் நிறுவனத்திற்கு 5 கோடி ரூபாய் அபராதம் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மெக்டொனால்ஸ் நிறுவனம் உலகின் பல்வேறு நாடுகளில் தனது கிளைகளை வைத்துள்ளது.

அதில் பர்கர் உள்ளிட்ட துரித உணவுகளை விற்பனை செய்து வருகின்றது. இந்நிலையில் லண்டனில் இயங்கி வரும் மெக் டொனால்ஸில் பெண் ஒருவர் கடந்த 2021 ஆம் ஆண்டு வாங்கிய சீஸ் பர்கரில் எலியின் கழிவுகள் இருந்துள்ளது.

இதை கண்டு அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்த அப்பெண் இது குறித்து புகார் அளித்தார். அதன் பேரில் சுகாதாரத்துறை அதிகாரிகள் அந்த கடைக்கு சென்று ஆய்வு நடத்தியுள்ளனர்.

அப்போது கடை சுகாதாரமற்ற முறையில் இயங்கியது தெரியவந்துள்ளது. இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்ற நிலையில் இதற்கான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது .

அதன்படி சுகாதார விதிகளை மீறி செயற்பட்ட மெக் டொனால்ஸ் நிறுவனம் பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு இலங்கை மதிப்பில் சுமார் 20 கோடி ரூபாய் அபராதத் தொகை வழங்க வேண்டும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல்:

# றோயல்ஸை வென்ற ஹைதரபாத்



இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), ஜெய்ப்பூரில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ் உடனான போட்டியில் சண்றைசர்ஸ் ஹைதரபாத் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: றோயல்ஸ்

றோயல்ஸ்: 214/2 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜொஸ் பட்லர் 95 (59), சஞ்சு சாம்ஸன் ஆ.இ 66 (38), யஷஸ்வி ஜைஸ்வால் 35 (18) ஓட்டங்கள். பந்துவீச்சு: அபிஷேக் ஷர்மா 0/15 [2])

சண்றைசர்ஸ்: 217/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: அபிஷேக் ஷர்மா 55 (34), ராகுல் ட்ரிபாதி 47 (29), அன்மோல்பிறீட் சிங் 33 (25), ஹென்றிச் கிளாசென் 26 (12), கிளென் பிலிப்ஸ் 25 (07), அப்துல் சமட் ஆ.இ 17 (07) ஓட்டங்கள். பந்துவீச்சு: யுஸ்வேந்திர சஹால் 4/29 [4], இரவிச்சந்திரன் அஷ்வின் 1/35 [4])

போட்டியின் நாயகன்: கிளென் பிலிப்ஸ்

முன்னதாக அஹமதாபாத்தில் நடைபெற்ற லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸுடனான போட்டியில் நடப்புச் சம்பியன்களான குஜராத் டைட்டான்ஸ் வென்றது.

இந்நிலையில், மும்பையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரை மும்பை இந்தியன்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.



### ஐந்தாவது போட்டியில்

## பாகிஸ்தானை வீழ்த்திய நியூசிலாந்து

பாகிஸ்தானுக்கெதிரான ஐந்தாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் நியூசிலாந்து வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதல் நான்கு போட்டிகளையும் வென்ற பாகிஸ்தான் தொடரை ஏற்கெனவே கைப்பற்றிய நிலையில், கராச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்தின் அணித்தலைவர் டொம் லேதம், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, வில் யங்கின் 87 (91), லேதமின் 59 (58), மார்க் சப்மனின் 43 (33), றஷின் ரவீந்திராவின் 28 (20), கோல் மக்கொஞ்சியின் 26 (25) ஓட்டங்களோடு 49.3 ஓவர்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து 299 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஷகீன் ஷா அப்ரிடி 3, உஸாமா மிர், ஷடாப் ஆகியோர் தலா 2, மொஹமட் வாஸிம் மற்றும் ஹரிஸ் றாஃப் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 300 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 46.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 252 ஓட்டங்களையே பெற்று 47 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், இஃப்திஹார் அஹ்மட் ஆட்டமிழக்காமல் 94 (72), அக்ஹா சல்மான் 57 (57) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், ஹென்றி ஷிப்லி, றஷின் றவீந்திரா ஆகியோர் தலா 3 மற்றும் அடம் மில்ன், மற் ஹென்றி, இஷ் சோதி தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப்போட்டியின் நாயகனாக ஷிப்லி தெரிவானதோடு, தொடரின் நாயகனாக பக்கர் ஸமன் தெரிவானார்.

## சம்பியனான மட்டக்களப்பு சிவானந்தா



வி.ரி. சகாதேவராஜா

காரைதீவில் நடைபெற்று வந்த கூடைப்பந்தாட்டத் தொடரில் மட்டக்களப்பு சிவானந்தா அணி சம்பியனானது.

காரைதீவு விபுலானந்த மைதானத்தில் நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் காரைதீவு கூடைப்பந்தாட்டக் கழகத்தை எதிர்கொண்ட சிவானநந்தா, 52-45 என்ற புள்ளிகள் கணக்கில் வென்று சம்பியனானது.



### இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## வெஸ்ட் ஹாமிடம் தோற்ற யுனைட்டெட்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், வெஸ்ட் ஹாம் யுனைட்டெட்டின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் தோற்றது.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 82 புள்ளிகளுடன் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி முதலாமிடத்திலுள்ளது. 81 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஆர்சனலும், 65 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நியூகாசில் யுனைட்டெட்டும், 63 புள்ளிகளுடன் நான்காமிடத்தி மன்செஸ்டர் யுனைட்டெட்டும் காணப்படுகின்றன. இதில் ஆர்சனல் ஏனைய அணிகளை விட ஒரு போட்டி அதிகமாக விளையாடியுள்ளது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 09 மே 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.